

# பனிமயம்

மார்ச் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

“ஆண்டவரின் செயல்கள் வியப்புக்குரியவை. அவை மனிதரின் கண்ணுக்கு மறைவாய் உள்ளன” (சீஞா 11:4) என்கிறது சீராக்கின் ஞானநூல். ஆம், நம் கடவுள் வியப்புக்குரியவர் என்பதை நம் அனுபவங்கள் எடுத்துச்சொல்கின்றன.

கடந்த பிப்ரவரி மாதம் லூர்து அன்னையின் திருவிழாவை எப்படிக் கொண்டாடுவோமோ என்று ஐயம் கொண்டிருந்த வேளையில், ஆண்டவரின் அரும்பெரும் இரக்கத்தால் அரசின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. 01.02.2022 செவ்வாய் முதல் 11.02.2022 வெள்ளி வரை புனித **லூர்து அன்னை கெபியில்** லூர்து அன்னையின் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் 11 நாள்களும் திரளான இறைமக்கள் கலந்துகொண்டு அற்புதங்களின் தாயான லூர்து அன்னையின் ஆசியைப் பெற்றுக்கொண்டார்கள். இறைவனுக்கு நன்றி!

இதோ, இந்த மார்ச் திங்களின் இரண்டாம் நாளிலேயே தவக்காலம் தொடங்குகின்றது. இது கடவுள் நமக்குத் தரும் அருளின் காலம், மனமாற்றத்தின் காலம் என்பதை உணர்வோம். “இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்” (2 கொரி 6:2) என்ற உணர்வுடன் இத்தவக்காலத்தை அணுகுவோம். கடந்த ஆண்டுபோலவே, இந்த ஆண்டும் நமது பங்கில் ஏராளமான தவக்கால நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஆர்வமுடன் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.

நமக்காக சிலுவைச் சாவை ஏற்ற கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 22 தாரகை 7

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**உயிரி அறநெறிச் சவால்களை எதிர்கொள்ளும் ஒரு கிறிஸ்தவ பதிலிறுப்புக்காக...**

புதிய உயிரி அறநெறிச் சவால்களை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்கள் தங்கள் இறை வேண்டலினாலும் செயல்களினாலும் அனைத்து மனித வாழ்வின் மாண்பைத் தொடர்ந்து பாதுகாக்க நாம் மன்றாடுவோம்

# உள்ளே...

1. இடைவிடா சகாய மாதா! ....................4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் ....................6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை ....................8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ......10
செல்வராஜ் மிராந்தா

5. பனிமயம் - மீள்பார்வை ....................12
கலாபன் வாஸ்

6. நம் திருச்சபை, நமது பெருமை ....................14
"க்றிஸ் மிலியன்"

7. பனிமய சாட்சியங்கள் ....................16

8. விவிலியப் போட்டி ....................18

9. பனிமயப் பகிர்வு ....................20

10. தவக்கால சிறப்பு நிகழ்வுகள் - 2022 ....................24

மரியன்னையின் மேன்மைகள் : 25

# இடைவிடா சகாய மாதா!



நமது பேராலயத்தின் திருப்பீட முற்றத்திலுள்ள சகாயமாதா பீடத்தில் சகாய அன்னையின் புதிய திருவுருவப் படம் அர்ச்சிக்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். சகாய அன்னையின் படத்திற்கு வரலாறும், விளக்கங்களும் இருக்கின்றன. அவற்றை அறிந்துகொள்வது நல்லது.

சகாய அன்னையின் இத்திருவுருவப் படம் 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும், கேராஸ் துறவியர் இல்லத்திலிருந்து 1499ஆம் ஆண்டு உரோமைக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் வரலாறு சொல்கிறது.

15ஆம் நூற்றாண்டில் உரோமையிலுள்ள ஒரு வணிகர் இந்தப் படத்தை விலைக்கு வாங்கி வீட்டில் வைத்துள்ளார். அவரது 6 வயது மகளுக்கு மரியன்னை காட்சி தந்து, சகாய அன்னையின் படத்தை வீட்டில் வைக்காமல், கோவிலில் வைக்கவேண்டும் என்றும், ;உரோமையிலுள்ள மேரி மேஜர் பேராலயம், லாத்தரன் பேராலயம் இரண்டுக்கும் நடுவில் வைக்குமாறும் கேட்டுக்கொண்டார். மரியன்னைமீது பக்தி கொண்ட அக்குடும்பம் அதன் பின்னர் படத்தை உரோமையிலுள்ள புனித மத்தேயு ஆலயத்தில் ஒப்படைத்துள்ளனர். அங்கே இந்தப் படம் 300 ஆண்டுகள் இருந்தது.

அதன்பின்னர், அந்தக் கோவிலின் உரிமையைப் பெற்ற மீட்பரின் சபைத் (Redemptorists) துறவியர், தங்களது சபை நிறுவனரான புனித அல்போன்ஸ் மரிய லிகோரியாரின் பெயரில் உரோமை எஸ்கலின் குன்றில் பேராலயம் ஒன்றை எழுப்பி, அப்பேராலயத்தில் சகாய அன்னையின் திருப்படத்தை வைத்துப் பாதுகாத்து வருகின்றனர். 1583ஆம் ஆண்டு முதல் இத்திருப்படம் அங்கேதான் உள்ளது. வாரந்தோறும் நவநாள் வழிபாடுகள் அங்கே நடைபெற்று வருகின்றன. இந்தச் செய்திகள் அனைத்தையும் மீட்பரின் சபைத் துறவியர் ஆவணப்படுத்தியுள்ளனர்.

சகாய மாதா பக்தியையும், படத்தையும் பரப்பும் திருப்பணி மீட்பரின் சபைத் துறவியரிடம் ஒப்படைக்கப்பட்டதால், அவர்கள் இப்படத்தின் பிரதிகளை



உலகெங்கும் அனுப்பினர். இன்று உலகெங்கும் பல கோவில்கள் இடைவிடா சகாய அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு, பல்லாயிரம் இறைமக்களை ஈர்க்கின்றன. மும்பையின் மாஹிம் பங்கின் புனித மைக்கேல் கோவிலில் ஒவ்வொரு புதன்கிழமையும் ஆயிரக் கணக்கில் சகாயமாதா வார வழிபாட்டில் மக்கள் பங்கேற்கின்றனர் என்பது ஓர் எடுத்துக்காட்டு.

இடைவிடா சகாய அன்னையின் படம் ஒரு வியப்பான ஓவியம். இதனை வரைந்த ஓவியர் யார் என்று நமக்குத் தெரியாது. இது நற்செய்தியாளர் லூக்காவால் வரையப்பட்டது என்று ஒரு மரபு தெரிவிக்கிறது. கேரோஸ் துறவியரின் மரபுப்படி இந்த ஓவியம் புனித லாசரசால் வரையப்பட்டது. இந்தப் படத்தின் முன்பாக நின்று இறைவேண்டல் செய்த பலரும் மிகுந்த ஆசிகளைப் பெற்றுக் கொண்டதால், இந்த ஓவியம் “புதுமைப் படம்” (Miraculous Picture) என்றும் அழைக்கப் படுகிறது.

சகாய அன்னையின் படத்திலுள்ள பல அடையாளங்கள் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன. இப்படத்தில் அன்னை மரியா கருஞ்சிவப்பு ஆடையை அணிந்திருக்கிறார்கள். பைசாந்திய ஓவியப் பின்னணியில் கருஞ்சிவப்பு என்பது அரசிக்குரிய நிறமாகும். அன்னை மரியா தமது கையால் திருமகன் இயேசுவை மக்களிடம் சுட்டிக்காட்டுவதுபோல் ஓவியம் அமைந்துள்ளது.

இந்த ஓவியத்தின் தனித்தன்மை அன்னையின் கரங்களிலுள்ள சிறுவன் இயேசுதான். சிறுவன் இயேசு அச்சமடைவதுபோலும், அதன் காரணமாக அவரது காலின் ஒரு செருப்பு கழன்று விழுவதுபோலும் ஓவியர் வரைந்து நம்மை வியப்படைய வைக்கிறார். ஏன் இந்த அச்சம்? ஓவியத்தின் இடப்புறத்தில் மிக்கேல் அதிதூதர் ஓர் ஈட்டியையும், புளித்த திராட்சை இரசத்தைத் தோய்த்த கடற்பஞ்சுக் கோலையும் கையில் வைத்துள்ளார். வலப்புறத்தில் கபிரியேல் அதிதூதர் சிலுவையையும், ஆணிகளையும் கையில் வைத்திருக்கிறார். இவை போதாதா, ஒரு குழந்தையை அச்சப்படுத்த? கிழக்கத்தியத் திருஅவையின் தொன்மைக்கால மரபின்படி, இயேசுவின் குழந்தைப் பருவத்திலேயே அன்னை மரியா அவரது பிற்காலப் பாடுகளையும், சிலுவை மரணத்தையும் எடுத்துச்சொல்லி அவரை மனதளவில் ஆயத்தம் செய்தாராம். அந்த மரபின்படியே ஓவியர் இதை வரைந்துள்ளார்.

மரியா மக்களை நோக்கி “என் மகனைப் பாருங்கள்” என்று சொல்வதுபோல, இத்திருவப்படம் அமைந்துள்ளது. எனவே, “பாடுகளின் இறையன்னை” என்று இப்படத்திற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. கூர்ந்து நோக்கினால், இன்னும் சிலவற்றை நாம் பார்க்கலாம். அன்னை மரியா “பெருங்கடலின் விண்மீன்” என்று காட்ட அவரின் நெற்றியில் ஒரு விண்மீன் பொறிக்கப்பட்டுள்ளது. இரு வானதூதர் களுக்கும் மேலே “இறைவனின் அன்னை” என்று பொருள்படும் “மெதேர் தெவூ” என்னும் கிரேக்க எழுத்துகள் பொறிக்கப் பட்டிருக்கின்றன. இரு வானதூதர்களுக்கும் அருகில் அவர்களது பெயரான “மிக்கேல் அதிதூதர்”, “கபிரியேல் அதிதூதர்” என்னும் கிரேக்க எழுத்துகள் காணப்படுகின்றன. கீழே “இயேசு கிறிஸ்து” என்ற பெயரின் கிரேக்க எழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்த முறை சகாய மாதா படத்தின் முன் நிற்கும்பொழுது, இவற்றையெல்லாம் கவனியுங்கள். அந்த அன்னையிடம் மன்றாடுங்கள். அவர் உங்களுக்கு ஆசி வழங்குவார்.

**அருள் மரி வேந்தன்**

52 மரியன்னைப் புனிதர்கள்

# புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்

## அன்னையைப் பற்றிப் போதித்த முதல் ஆயர்!



"விரைவில் நான் எருசலேம் வந்து அங்கு கூடியுள்ள கிறித்தவ நம்பிக்கையாளர்கள் அனைவரையும் காண ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இயேசுவின் தாயைச் சந்திக்க விரும்புகிறேன். அவர் மாண்பு மிக்கவர், அன்பு நிறைந்தவர், அனைவரையும் வியக்க வைப்பவர் என்றெல்லாம் அவரைப் பற்றிக் கேள்விப்படுகிறேன். உண்மைக் கடவுளைத் தம் வயிற்றில் தாங்கிய கன்னியைச் சந்திக்க யார்தாம் விரும்ப மாட்டார்? துன்பங்கள் நடுவிலும் மகிழ்ச்சியாய் இருக்கிறார் என்றும், அவரைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் மனம் பூரிக்கின்றனர் என்றும் நான் கேள்விப்படுகிறேன்".

இப்படி ஒரு மடலை எழுதியவர் யார் தெரியுமா?

எப்போதெல்லாம் புனிதர்கள் மன்றாட்டு மாலை பாடப்படுகிறதோ, அப்போதெல்லாம் நாம் தவறாமல் கேட்கும் ஒரு பெயர் புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார். அவர்தாம் இந்த மடலை புனித யோவானுக்கு எழுதியிருக்கிறார்.

அந்தியோக்கு இஞ்ஞாசியார் எருசலேம் சென்றாரா, அன்னை மரியாவை நேரில் சந்தித்தாரா என்பது நமக்குத் தெரியவில்லை. எதிர்பாராதவிதமாக, அவர் மறைசாட்சியாய்க் கொல்லப்பட்டுவிட்டார். ஆனால், அன்னை மரியாவைப் பற்றிய முதல் குறிப்புகளை எழுதியவர் என்னும் பெருமைக்கு அவர் சொந்தக்காரர் ஆகிவிட்டார்.

அந்தியோக்கு என்பது தொடக்கத் திருஅவையில் ஒரு முக்கியமான பெயர். "அந்தியோக்கியாவில்தான் முதல் முறையாகச் சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றார்கள்" (திப 11:26) என்று திருத்தூதர் பணிகள் நூல் பெருமையாகப் பேசும் நகர் இதுவே. இன்றைய துருக்கி நாட்டில் அமைந்துள்ள இந்நகர் "கிறித்தவத்தின் தொட்டில்" என்று அழைக்கப்பட்டது. முற்காலத்தில் மிகப்பெரிய வணிக நகராக விளங்கியது. பேதுரு, பர்னபாஸ், பவுல் ஆகியோர் இந்நகரில் நற்செய்தி அறிவித்துள்ளனர்.

இந்நகரின் புகழ்பெற்ற மைந்தர்தாம் இஞ்ஞாசியார். இவரின் வாழ்வு பற்றிய செய்திகள் அதிகம் இல்லை. இவர் பிறந்த ஆண்டு தெரியவில்லை. இறந்த ஆண்டும்

நிச்சயமாகத் தெரியவில்லை. கி.பி. 108லிருந்து 140க்குள் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இயேசு அரவணைத்து ஆசீர்வதித்த குழந்தைகளில் இவரும் ஒருவர் என்றுகூட ஒரு மரபு சொல்கிறது. ஆனால், அவற்றுக்கான ஆதாரங்கள் இல்லை.

அவரது எழுத்துகளிலிருந்து இவரைப் பற்றிய ஒரு சில தகவல்களை நாம் தெரிய வருகிறோம். இளமையிலேயே கிறித்தவத்துக்கு மனம் மாறினார் என்றும், தனது நண்பரான போலிகார்ப்புடன் இணைந்து திருத்தூதர் யோவானின் சீடராக விளங்கினார் என்றும் அவரது மடல்கள் தெரிவிக்கின்றன.

புகழ்பெற்ற திருஅவை வரலாற்று ஆசிரியர் செசரியாவின் யுசேபியஸ் தமது “திருஅவை வரலாறு” என்னும் நூலில் சிரியாவிலுள்ள அந்தியோக்கு நகரின் இரண்டாம் ஆயர் இஞ்ஞாசியார் என்று ஆவணப்படுத்தியுள்ளார். ஆயர் மட்டுமல்ல, இரண்டாம் நூற்றாண்டின் மாபெரும் இறையியல் அறிஞர், கிறித்தவ எழுத்தாளர் என்றும் அறியப்படுகிறார். புனித போலிகார்ப், புனித கிளமெண்ட் இருவருக்கும் இணையாக திருஅவைத் தந்தையாகவும் போற்றப்படுகிறார். தமது கிறித்தவ நம்பிக்கைக்காக உரோமைக்குக் கொண்டு செல்லப்பட்டு மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார்.

உரோமைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் ஏழு மடல்களை எழுதியுள்ளார். அவற்றில் ஒன்றான எபேசியருக்கு எழுதப்பட்ட திருமடலில்தான் அன்னை மரியாவைப் பற்றி புகழ்ந்து பேசியுள்ளார். இக்கடிதங்கள் “திருத்தூதுத் தந்தையரின்” படைப்புகளில் ஒரு பகுதியாக இன்றும் பாதுகாக்கப்படுகின்றன. திருஅவை, அருள்சாதனங்கள், ஆயர்களின் பணி பற்றிப் பேசும் தொன்மையான ஆவணங்களாகக் கருதப்படுகின்றன.

அந்தியோக்கு நகரின் ஆயராகப் பணியாற்றிய காலத்தில் “ஞானக் கொள்கையினர்” (Gnosticism) எனப்படும் குழுவினர் மெய்யியலில் ஆதிக்கம் செலுத்தினர். உடல் என்பது தீயது, உடலில் இருந்து விடுதலை பெறும் ஞானமே உயர்ந்தது என்றும், உடல் இறைமாண்புக்கு எதிரானது என்றும் போதித்து வந்தனர். தொடக்க கால கிறித்தவர்கள் இக்கொள்கையை மறுத்தனர். இயேசு மானிட உடல் எடுத்ததால், உடலை மாண்புறச் செய்துள்ளார் என்று போதித்தனர். நற்செய்தியாளர் யோவான்கூட “வாக்கு மனுவானார். நம்மிடையே குடிகொண்டார்” என்று எழுதியது ஞானக் கொள்கைக்கு எதிராகவே.

புனித அந்தியோக்கு இஞ்ஞாசியாரும் அவ்வாறே இயேசுவின் மானிட அவதாரத்தைப் பற்றி விளக்கி எழுதினார். “நம் இறைவன் இயேசு கிறிஸ்து, கடவுளின் திட்டத்தின்படியே மரியாவிடம் கருவுற்றார். தாவீது மற்றும் தூய ஆவியார் இருவரின் வித்து இவரே” என்று எபேசியருக்கு எழுதிய மடலில் எழுதினார் இஞ்ஞாசியார். இதனால், இறைத் திட்டத்தில் அன்னை மரியாவுக்கும் ஒரு பங்கு இருந்தது என்று முதன் முதலில் நிறுவப்பட்டது. இயேசுவின் பிறப்பு, மரியாவின் கன்னிமை, இயேசுவின் இறப்பு ஆகிய மூன்று மறைநிகழ்வுகளும் உரக்க அறிவிக்கப்படவேண்டியவை என்று எழுதினார். மரியாவின் கன்னிமையையும், அவரது குழந்தைப் பேற்றையும் “பேச இயலாத மறைபொருள்கள்” என்று எழுதினார்.

பிற்கால மரியியல் சிந்தனைகளுக்கு அடிக்கல் நாட்டிய இறையியலாளர்களில் அந்தியோக்கு இஞ்ஞாசியாருக்கு சிறப்பிடம் இருக்கிறது. மரியன்னையை போற்றி வணங்கும் நாம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அக்டோபர் 17 அன்று இவரது விழா கொண்டாடப்படுகிறது.



அருள்பணி. குமார்ராஜா

# அன்னையின் புதிய ஆலயம்

**ஞான அதிகார சலுகை**

போர்த்துக்கீசிய அரசாட்சி இந்தியாவில் வீழ்ச்சியுற்றிருந்த காரணத்தால், போர்த்துக்கீசிய மன்னர் தனது ஞான அதிகார சலுகையை இங்கு சரிவர பயன்படுத்த முடியாமல் போனது.



எனவே, 1838-ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் நாளன்று **பாப்பரசர் 16ஆம் கிரகோரியார்** (Pope Gregory XVI, 1831-1846) முல்த்தா ப்ரெக்ளாரே (Multa Praclare) என்ற பத்திரத்தின் மூலம், இந்தியாவில் கோவா மறைமாநிலம் நீங்கலாக, கொச்சி - கிரங்கனூர் - மயிலாப்பூர் ஆகிய மூன்று மறை மாநிலங்களிலும் போர்த்துக்கீசிய அரசின் பதுரவாதோ ஞான அதிகாரத்தை தடை செய்தார்.

பாப்பரசர் இந்த மறைமாநிலங்களை உரோமை விசுவாசப் பரம்புதல் சபையின் (Propaganda Fide) கீழ் இருந்த மதுரை மிஷனிடம் ஒப்படைத்தார்.

1838 ஆம் ஆண்டு தூத்துக்குடி பனிமய அன்னை ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்க வந்த மதுரை மிஷனின் **சுவாமி அலெக்ஸாண்டர் மார்ட்டின்** (Alexandar Martin) என்பவரிடம், ஆலயப் பொறுப்பை ஒப்படைக்க பரவ குல சாதித் தலைவர் **தொன் கஸ்பார் அந்தோனி தெக் குரூஸ் வாஸ் கொரைரா** (1808 - 1839) மறுத்துவிட்டார்.

அதனால் சுவாமி மார்ட்டின் தென்னைக் கீற்றுகளால் ஒரு குடிசைக் கோவிலை அமைத்து, அதனை **புனித இஞ்ஞாசியாருக்கு** அர்ப்பணித்தார்.

பாண்டிச்சேரி **ஆயர் போனாட்** (Most Rev. Bonnard, 1836-1861) தூத்துக்குடியில் சமாதான நிலையை உருவாக்குவதற்காக, பரவ குல சாதித் தலைவர் **தொன் கஸ்பார் அந்தோணி தெக் குரூஸ் வாஸ் கொரைரா**விடம் (1808 - 1839) பேச்சு வார்த்தை நடத்தினார். பின்னர் அவர் மரணமடைந்த பின் அவரது புதல்வனான **தொன் சூசை அந்தோணி தெக்குரூஸ் வாஸ் பல்தான்** (1839-1856) என்பவரிடமும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

1840 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாளன்று கையெழுத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தப்படி, கோவா மிஷனைச் சேர்ந்த பங்குக் குருவின் பொறுப்பில்தான் தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயம் இருக்கவேண்டும் என்றும், அந்தக் குருவானவர் பிரெஞ்சு மிஷன் ஆயரிடமிருந்தே பங்குக் குருவிற்கான ஞான அதிகாரத்தை பெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை புதிய மதுரை மிஷன் தலைவரான **சுவாமி ஜோசப் பெர்த்ராண்ட்** (Joseph Bertrand) ஏற்றுக் கொள்ளவில்லை.

பனிமய அன்னை ஆலயம் சாதித் தலைவர் அதிகாரத்தின் கீழ் இருந்ததை எதிர்த்து, மதுரை மிஷனின் தென்பகுதி தலைவர் **சுவாமி கஸ்தானியர்** (Castanier) நீதிமன்றத்தில் முறையிட்டார்.

1842 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, சுவாமி கஸ்தானியாருக்கு அபராதம் விதிக்கப்பட்டு பனிமய அன்னையின் ஆலய நிர்வாகம் பரவ குல சாதித் தலைவரின் அதிகாரத்தின் கீழ் இருக்க அனுமதிக்கப்பட்டது.

## இன்னொரு புதிய ஆலயம்

ஒவ்வொரு ஊரிலும் பெரும்பாலான பரவ மக்கள் பிரெஞ்சு இயேசு சபைக் குருக்களையே ஆதரித்து, சாதித் தலைவரை புறக்கணித்தனர்.

பெரியதாழை முதல் ராஜாக்கள்மங்கலம் வரை உள்ள கடற்கரை ஊர்களின் பரவ மக்கள், தங்களுக்கென்று **கூத்தங்குளி**யைச் சேர்ந்த **கித்தேரியான் பட்டங்கட்டி** என்பவரை தங்களது சாதித் தலைவனாக நியமித்துக் கொண்டனர்.

பிரெஞ்சு இயேசு சபைக் குருக்களை ஆதரித்த தூத்துக்குடி பரவ மக்களின் எண்ணிக்கை உயர்வதை உணர்ந்த, பாளையங்கோட்டை வட்டார இயேசு சபை அதிபர் **அலெக்சிஸ் கனோஸ்** (Alexis Canoz) தூத்துக்குடியில் புதிதாக ஒரு ஆலயம் எழுப்ப விருப்பப்பட்டார்.

புதிய ஆலயத்திற்கான இடத்தை உள்ளூர் சாதித் தலைவர் **மனுவேல் வியாகுல மோத்தா** என்பவரிடம் இருந்து சுவாமி கஸ்தானியர் நன்கொடையாக வாங்கினார். வேம்பாரைச் சேர்ந்த வியாகுல மோத்தா ஆலயம் கட்டுவதற்கு இடத்தை நன்கொடையாக அளித்ததால், இயேசு சபையினர் அவருக்கு அந்தப் புதிய ஆலயத்தில் சாதித் தலைவருக்கு உரியதுபோல விஷே சலுகைகளும் மரியாதைகளும் அளித்தனர்.

புதிய ஆலயம் **சுவாமி பிச்சினல்லி** மேற்பார்வையில் கட்டப்பட்டது.



1846 ஆம் ஆண்டு மே 19 ஆம் நாளன்று, **பாப்பரசர் 9 ஆம் பத்திநாதர்** (Pope Pius IX, 1846-1878) 'Ex Pastoralis Officii' என்றப் பத்திரத்தின் மூலம் முத்துக்குளித்துறையை உள்ளடக்கிய புதிய மதுரை மிஷனை திருச்சிராப்பள்ளி விக்காரியேட் (Tiruchirapalli Vicariate) என்ற தனி அப்போஸ்தலிக்க மறைமாநிலமாக உயர்த்தினார்.



1846 ஆம் ஆண்டு மே 25 ஆம் நாளன்று சுவாமி **அலெக்சிஸ் கனோஸ்** (Alexis Canoz) என்பவர் இந்தப் புதிய மறை மாநிலத்தின் முதல் ஆயராக நியமனம் செய்யப்பட்டார்.

1847 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் நாளன்று **வராப்போலி** (Verapoly) மறை மாநிலத்து பேராயர் **லுடோவிகோ மார்டினி** (Most Rev. Loudorico Martini, 1844-1859) அவர்களால் சுவாமி அலெக்சிஸ் கனோஸ் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார் .

ஆயராக பொறுப்பேற்றவுடன் புதிய ஆயர் **அலெக்சிஸ் கனோஸ்** 1848 ஆம் ஆண்டில் தெற்கு நோக்கிச் சென்று பங்கு விசாரணை செய்து 12,000க்கும் மேற்பட்டோருக்கு உறுதிபூசுதல் கொடுத்தார்.

இவர் தூத்துக்குடியில் கட்டப்பட்ட புதிய ஆலயத்தை 1849 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாளன்று, **இயேசுவின் திரு இருதயத்திற்கும் மரியாளின் மாசற்ற இருதயத்திற்கும்** அர்ப்பணித்து திறந்து வைத்தார்.

கட்டிடக் கலைஞரான **சகோதரர் லமோத்** என்பவரின் மூன்றாண்டு கால உழைப்பிற்குப் பின்னரே, 1864 ஆம் ஆண்டில் இவ்வாலயம் முற்றிலுமாக முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது.

- (தொடரும்)



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

10

# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...



தனது குருத்துவ வெள்ளிவிழாவை 1964ஆம் ஆண்டு கொண்டாடிய தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் தாமஸ் பர்னாந்து அவர்கள் தலைமையில் தங்கத் தேர் முன்பு வெகு ஆடம்பரமாக திருப்பலி நிறைவேற்றப்பட்ட பின்பு "மரிய மாதாவே மரிய மாதாவே" என்ற வாழ்த்தொலி விண்ணதிர - மக்கள் ஆர்ப்பரிக்க - அலைகடல் போல் எங்கும் தலைகடலென மக்கட் கூட்டத்தின் நடுவே மாதாவின் மனோகரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த தங்கத் தேர் மெல்ல அசைந்து தரையில் மிதந்து வரத் தொடங்கியது. பெரிய கோவில் தெரு, பீட்டர் கோவில் தெரு, பெரிய கடை வீதி, கிரேட் காட்டன் வீதி, பீச் ரோடு என நகர்வலம் வந்து அன்னையின் ஆலயம் முன்பு நின்றது.

மற்ற எந்த பங்குத் தந்தையருக்கும் கிடைக்காத வாய்ப்பாக அருள்தந்தை எஸ்.எம். தல்மெய்தா அடிகளாரின் காலத்தில் தான் இரண்டு முறை தங்கத் தேர் பவனியை வெகு விமரிசையாக நடத்திக்காட்டியது ஒரு தனித்துவமான நிகழ்வாக மக்கள் பேசிக் கொண்டார்கள்.

பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கு இன்று இருப்பதுபோல் பீச் ரோடு, ஜார்ஜ் ரோடு தெற்கு காட்டன் ரோடு, விக்டோரியா தெரு என்ற நான்கு எல்லைகளுக்குட்பட்டதாக தந்தையவர்கள் காலத்தில் அதாவது 1954 முதல் 1964 வரை ஒரு குறுகிய நில வரம்புக்குள் உட்பட்டு இருந்ததில்லை. 1950களில் தொடங்கப்பட்டு விரிவடைந்த லயன்ஸ் டவுனும், இன்று தோமையார் ஆலயப் பங்குப் பணித்தளமும் அன்னையின் பங்குத் தள எல்லைக்குட்பட்டே இருந்தன.

அருள்தந்தை ஆரம்பித்து வைத்த இடைவிடா சகாய மாதா பக்தி மக்களிடையே வெகுவாகப் பரவி இருந்த காரணத்தால் லயன்ஸ் டவுன் பகுதியில் குடியேறியிருந்த மக்கள் தங்களுக்கென சகாய மாதா பெயரில் ஒரு சிற்றாலயத்தை தங்கள் குடியிருப்புக்குள் கட்டியிருந்தார்கள். அதன் இட நெருக்கடியையும் பழுதுபட்ட தன்மையையும் கவனித்த அருள்தந்தை தல்மெய்தா அவர்கள் நல்ல முறையிலே செப்பனிட்டு அங்கு சில பக்தி நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடு செய்தார்கள். இன்று அந்த சிற்றாலயம் பெரிதாக்கப்பட்டு சகாயமாதா பங்குப் பணித் தளமாக வளர்ச்சியடைந்திருப்பதற்கு அச்சிற்றாலயமே காரணமாயிருந்திருக்க வேண்டும்.





அதுபோலவே முன்பு உப்பளத்திற்குச் செல்லும் ரயில்வே தண்டவாளத்துக்கு அருகில் ஒரு சிறு குருசடியும் கெபியும் தோமையார் பெயரில் உருவாகி இருந்தது. அதை ஒரு காப்பிக்கடை உரிமையாளர் தன் சொந்த செலவில் பராமரித்து வந்தார். அந்த இடத்தில் ஜெபித்த மக்களின் வேண்டுதல்கள் நடைபெறத் தொடங்கின. சிறிது சிறிதாக வளரத் தொடங்கிய கெபியை பெரிதாக்க வேண்டுமென நினைத்த தந்தையவர்கள், அந்த காப்பிக்கடை உரிமையாளரை அணுகி பேசி, அதை ஒரு சிற்றாலயமாக கிழக்கு நோக்கி இருக்கும்படி கட்டி முடித்து அன்னையின் ஆலயப் பங்கோடு சேர்த்தார்கள். முன்பு நகர சுத்தி தொழிலாளர்களின் சிறு குடியிருப்பாக இருந்த இடத்தில் கத்தோலிக்கக் குடியேற்றங்கள் நிகழ, பல கட்டிடங்கள் எழுந்தன. அதுவே நாளடைவில் தோமையார் பங்குப் பணித்தளமாக பரந்து வளர்ந்து இன்று ஒரு விசாலமான அழகிய ஆலயமும் பங்குத் தந்தையர் இல்லமும் உருவாகி இருக்கிறது. அதற்கு வித்திட்டவர் அருள்தந்தை எஸ்.எம். தல்மெய்தா அடிகளார்தான் என்பது எழுதித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

நமது ஞானத் தந்தையாகிய தூய சவேரியார் பெயரில் ஒரு சிற்றாலயம் தூய பனிமய அன்னை ஆலய வளாகத்துக்குள் இருப்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். என்றாலும் அதனுள்ளே சவேரியாரின் திருச் சுரூபம் கோவாவில் புனிதருடைய திருவுடல் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பீடத்தைப் போன்று அழகிய மர வேலைப்பாடுகள் கொண்ட பேழைபோல் இருக்கும். சவேரியாரின் சுரூபம் படுத்த நிலையில் கோவாவில் திருவுடல் வைக்கப் பட்டது போன்று வைக்கப்பட்டிருக்கும். அந்த சிற்றாலயம் அதிகமாக உபயோகப்படுத்தப் படாதிருந்ததால் பழுதுபட்டிருப்பதைக் கண்ட தந்தை அதை செப்பனிட்டுப் புதுப்பித்ததோடல்லாமல் அதன் ஒரு பகுதியில் செயல்பட்டுக் கொண்டிருந்த மருத்துவ நடுவத்தை நல்ல முறையிலே புதுப்பித்து அடித்தட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அதுபோலவே பனிமய அன்னை ஆலய நற்கருணை கிராதி இரும்பு கிரில் வேலைப்பாடுகளோடு இருந்ததை பளிங்கு கற்களால் நிறுவி பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அவர் பொறுப்பில் இருந்த 16 ஆண்டு காலத்தில் எப்போதும் ஏதாவதொரு மராமத்துப் பணி நடந்து கொண்டேதான் இருந்தது.

அவர் செய்த பணிகளிலெல்லாம் தலையாயது தெ லசால் சகோதரர்களை தூத்துக்குடிக்கு கொண்டு வந்து மேல்நிலைப் பள்ளியை நிறுவியது - அன்று செய்த கல்வித் திருப்பணி நகர் அளவில் பெரும் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறது. 1970ஆம் ஆண்டு தந்தையவர்கள் பொறுப்பை ஒப்புக் கொடுத்தபின் ஆறாண்டு காலம் ரீத்தம்மாள் புரம் மௌனமடத்தில் இறைப் பணியாற்றினார்கள்.

*- (தொடரும்)*



**செல்வராஜ் மிராந்தா**

30

# 'பனிமயம்' 2007 – மீள் பார்வை

★ அகங்காரம் மனிதனைக் கெடுக்கிறது. தாழ்ச்சியோ அவனை இறைவனுடைய சந்நிதானத்தின் முன் தூக்கி நிறுத்துகின்றது. அவனுடைய சாமர்த்தியம், அவன் செய்யும் காரியங்களில் அடங்கி இருக்கின்றது. தன்னையே பெரியவன் என எண்ணச் செய்யும் அகங்காரம், மற்றவர்களை நிந்திக்கிறது. கெடுதிகளுக்கும் காரணமாகின்றது. அப்பேர்ப்பட்டவன் அறிவீனனேயன்றி, உத்தமனல்ல.

நாம் ஒன்றுமில்லை என்றும், நமக்குச் சொந்தமாயிருப்பது பாவம் ஒன்றே தவிர மற்றொன்றுமில்லையென்றும், ஆகையால், மற்றப் படைப்புகளுக்குக் கீழாக நம்மையே நாம் தாழ்த்திக் கொள்ள வேண்டியதென்றும், இயேசு கிறிஸ்துவின் இராட்சியத்தில், "முதலானோர் கடைசியாகவும், கடைசியானவர்கள் முதலானவர்களாக" இருக்கிறார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்திடலாகாது. – "மணவைப் பிரியன்" ஜெயதாஸ் பர்னாண்டோ

★ தூத்துக்குடி. மாவட்டம் வரலாற்றுச் சிறப்புகளை உடையது. ஏகாதிபத்திய அதிகாரி ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்ற மாவட்டம். வணிகம் செய்ய வந்தவனை எதிர்த்து, வணிகக் கப்பலோட்டிய துறைமுக நகரம். இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புகளினால் முதன்மை பெற்ற நகரத்தை, **இரசிகர் மன்றங்கள்** விளம்பரப் பதாகை (டிஜிட்டல் பேனர்) வைத்துப் பெருமைப்படுத்த வேண்டியதில்லை.

தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தை, இன்று ஒரு வேளை உணவையாவது உண்டாரா என்பதை அறியாதவன்தான், திரையரங்கில் விசிலடித்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறான். நடிகர் நடிகைகள் நம் குருதியைக் குடித்து வாழும் அட்டைகள். அட்டைகளுக்கு ரசிகனாக இருப்பவன் பிணமாகத்தான் இருக்க முடியும். **'இரசிகன்'** என்ற பெயரில் விளம்பரப் பதாகை வைக்க இலட்ச ரூபாய் செலவு செய்யும் அவல நிலை தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் இராது. பேர் என்னவோ கங்காவும் பவானியும், குடிக்கத்தான் தண்ணீர் இல்லை என்பர். பல ரசிகர்களின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. – டார்ப்பிடோ.

★ "கடவுள்தான் என் மீட்பு. அவர்மேல் நம்பிக்கை வைப்பவன் அஞ்சான்" (எசாயா 12:1-3) என்ற இறைவாக்கை விசுவசித்து நன்றி கூறுவோம். ஏனெனில், பாவத்தைக் குறித்த சினம் தணிந்து ஆறுதலும் வலிமையும் தருகின்றார். கடவுளை நோக்கிக் கூக்குரலிட்டேன். தமது புனித மலையில் இருந்து என் குரலுக்குச் செவி சாய்த்தார். எனவே, ஆயிரமாயிரம் பகைவர்க்கும் நான் அஞ்சேன். என்னைக் காப்பவர் அவரே. இதுவே நமது விசுவாசம். – வேதியர் ஜோசப்.

**சக்தி**



பால் பொங்கும் பொழுது நீ
குலவையிட்டது போதும்...
கவலை கொள் – இத்தனை காலம் நீ
கிணற்றுத் தவளையாய் இருந்ததை நினைத்து!
சுண்ணாம்பு போல் நீரி நீரி – உனக்குள்
புகைந்தது போதும், பெண்ணே!
ஏனெனில், உனக்கும்
நாற்பதுக்குப் பின்
கால்சியப் பற்றாக்குறை வருமாம்...
கவனமாயிரு!

– லியோனா

★ **இறைமொழியிலேதான் புதுவாழ்வு**

இறைமொழி இறைவெளிப்பாடு மட்டுமல்ல, அது ஓர் அழைப்பு! வாழ்வதற்கும் வளர்வதற்குமான அழைப்பு!

"அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டாயின எதுவும் அவராலன்றி உண்டாகவில்லை" (யோவா 1:3). இல்லாமையிலிருந்து இருத்தலுக்கும் இயங்குதலுக்கும், வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அழைப்பது இறைமொழியே.

இறைவன் தம் வாழ்வை படைப்பில், மானிடரில் வெளிப்படுத்துகிறார் (தொநூ 1:26).

அவ்வாழ்வே மானிடருக்கு ஒளியானது (யோவா 1:4), வாழ்வே ஒளியானது, இருளுக்கு ஒளி தருகிறது.




அது அனைத்து மனிதருக்கும் ஒளி தந்தது (யோவா 1:9). நாடு, இனம், மொழி, பண்பாட்டு எல்லைகளைக் கடந்து அனைவருக்கும் இறை மொழி ஒளி தந்தது. – **மேதகு இவோன் அம்புரோஸ்.**

★ **'புதிய வாழ்வு'** என்பது பழையனவற்றை இழத்தலும், புத்தம் புதிய அம்சங்களை ஏற்றுக் கொள்தலும் ஆகும்.

**'பாஸ்கா'** என்றால், கடந்து செல்லுதல். ஆங்கிலத்தில் PASS OVER என்று கூறுகிறோம். இஸ்ரயேல் மக்கள், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கடந்து சென்றார்கள். ஒருவகை வாழ்க்கை முறைச் சூழமைவுகளிலிருந்து, இன்னொரு வாழ்க்கை முறை சூழமைவுக்குக் கடந்து சென்றார்கள்.

நமது பாஸ்காவும் இவ்வாறுதான் இருக்க முடியும், இருக்க வேண்டும். பழைய பாவ வாழ்வு, தீய சூழமைவுகளிலிருந்து நாம் விடுபட்டு, புதிய அன்புறவு வாழ்வு, புதிய சூழமைவுகளில் நாம் நிலைகொள்ள



வேண்டும். இதற்கு, நாம் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குக் கடந்து செல்ல வேண்டும்.

உண்மை வாழ்வுக்கு, எதார்த்த நிலைக்கு, எளிமை, தாழ்மைக்கு, கற்பு நெறி, தூய ஒழுக்கம், சிக்கனம், தேவைக்கேற்ற செலவு, திட்டமிட்டுச் செயல்படுதல், மன்னித்தல், பிறரை ஏற்றுக் கொள்தல், சகித்துக் கொள்தல், விட்டுக் கொடுத்தல், சுறுசுறுப்பு, சமத்துவம், சகோதரத்துவம்.

நாம் புதிய வாழ்வு வாழ, கடந்து செல்லப் புறப்படுவோமா? – பணி A.K. ஜெரோசின்.

★ **'தலைவிதி'** என்று ஒன்று இருக்கிறதா? அப்படி இருந்தால் அது யார் கையில் இருக்கிறது? ஓர் ஆங்கிலப் பழமொழி இக்கேள்விக்குத் தெளிவான விடை சொல்கிறது.

சிந்தனைகளை விதையுங்கள், செயல்களை அறுவடை செய்வீர்கள். செயல்களை விதையுங்கள், பழக்கங்களை அறுவடை செய்வீர்கள், பழக்கங்களை விதையுங்கள், உங்கள் தனித்தன்மையை அறுவடை செய்வீர்கள், உங்கள் தனித்தன்மையை விதையுங்கள், உங்கள் தலைவிதியை (DESTINY) அறுவடை செய்வீர்கள்! – பணி. சகாய ஜஸ்டின்.

**கலாபன் வாஸ்**
94863 90793



நம் திருச்சபை, நமது பெருமை - 8

சென்ற இதழ் தொடர்ச்சி....

# சுடர்விடும் விண்மீன்கள்!

மாசற்ற குழந்தைகளை விடுத்து, மிகவும் இளைய புனிதர் யார் என்றால், தொடக்க நூற்றாண்டுகளில் வாழ்ந்த இருவரை அடையாளம் காட்டுகிறது திருஅவை. முதலாமவர் கி.பி. 177ஆம் ஆண்டு மறைசாட்சியாக இறந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புனித லையன்ஸ் போஞ்சியுஸ். இவரது வயது 15தான். மற்றவர் கி.பி. 304ஆம் ஆண்டு மறைசாட்சியாக மரித்த 14 வயதே நிரம்பிய உரோமை நகர் புனித பங்கிராஸ்.



அண்மைக்கால இளம்புனிதர்களில் மிகவும் இளையவர் 12 வயதே நிரம்பிய புனிதை மரிய கொரற்றிதான். 1902ஆம் ஆண்டு பாலியல் வன்முறைக்கு உடன் படாததால் அலெசான்ட்ரோ செரனெல்லி என்பவனால் 14 முறை கத்தியால் குத்தப்பட்டுக் கொலையுண்டார். 1950ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் “கன்னியும் மறைசாட்சியும்” எனப் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டபோது, 30 ஆண்டு சிறைத்தண்டனைக்குப் பிறகு விடுதலையான அலெசான்ட்ரோவும் அந்தத் திருநிகழ்வில் கலந்துகொண்டார் என்பது ஒரு பெருமித நிகழ்வுதானே!

மறைசாட்சியல்லாத ஓர் இளம்புனிதர் என்றால், அது 14 வயதே நிரம்பிய புனித தோமினிக் சாவியோ.

இவர்கள் அனைவரையும்விட மிகவும் இளைய புனிதர் ஒருவர் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறார். ஆறே வயது நிரம்பிய இத்தாலி நாட்டைச் சேர்ந்த அன்றனிட்டா மியோதான் அவர். 2007ஆம் ஆண்டு திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அன்றனிட்டா மியோவைப் புனிதர் நிலைக்கு உயர்த்தும் பணிகளுக்கு அனுமதி அளித்தார்.



1937ஆம் ஆண்டு உரோமையில் எலும்புப் புற்றுநோயால் இறந்தாள் சிறுமி அன்றனிட்டா. அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவளது கால் நீக்கப்பட்டு செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. புற்றுநோய்க்கேயுரிய மாபெரும் வலியைத் துணிவுடனும், இறைநம்பிக்கையுடனும் பொறுத்துக் கொண்டாள் சிறுமி அன்டனிட்டா. படுக்கையில் கிடந்த நாள்களில் கடவுளுக்கும், அன்னை மரியாவுக்கும் அவள் எழுதிய கடிதங்களில் இறையியல் முதிர்ச்சியும், சிறந்த ஆன்மீகமும் இருப்பதாக வத்திக்கான் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இளையோரைப் புனிதர் நிலைக்கு உயர்த்துவதில் தயக்கம் காட்டும் திருச்சபை, அன்றனிட்டாவின் வாழ்வும், இறப்பும் இயேசுவுக்கு நன்கு சான்று பகர்வதாக எண்ணுகிறது. அன்றனிட்டாவின் பரிந்துரையால் இரண்டு புதுமைகள் நிகழ்ந்துவிட்டால், முதலில் “அருளாளர்” நிலைக்கும், பின்னர் “புனிதர்” நிலைக்கும் உயர்த்தப்படுவார் அன்றனிட்டா. அது நிகழ்ந்தால், அவர்தான் திருச்சபையின் 2000 ஆண்டு வரலாற்றில் மிகவும் இளைய புனிதராக இருப்பார்.

குழந்தைகளுக்குத் திருமுழுக்கு கொடுப்பது தவறு என்று வாதிடும் குறுஞ்சபையினருக்கு திருச்சபையின் இத்தகைய இளம் புனிதர்கள் நல்ல பதிலடி தருகிறார்கள். திருமுழுக்குப் பெற்ற குழந்தைகளும், சிறிய வயதினரும்கூட இயேசுவுக்கு மிகச் சிறந்த சான்றுகளாத் திகழ முடியும் என்றால், குழந்தைகளுக்கு ஏன் திருமுழுக்கு கொடுக்கக்கூடாது?

**10. நம் காலப் புனிதர்கள் :** புனிதர்கள் என்றாலே மிகப் பழங்காலத்தில் வாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் நமக்கு வரக்கூடாது என்பதற்காகவே திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் நம் காலத்தோர் ஏராளமானவர்களை புனித நிலைக்கு உயர்த்தினார்.

அவரது காலத்தில் 1700 பேர் புனிதர்களாக அறிவிக்கப்பட்டனர். அவர்களில் மாக்ஸ்மிலியன் கோல்பே, புனித ஃபவுஸ்தினா, பாத்திமாவில் காட்சி கண்ட புனித பிரான்சிஸ்கோ மற்றும் ஜெசிந்தா, புனித பாத்ரே பியோ ஆகியோர் அடங்குவர். நவீன காலத்திலும் நாம் தூய வாழ்வு வாழ முடியும், அதற்கான மாதிரிகள் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டவே திருத்தந்தை ஜான்பால் இத்தனை பேரை புனித நிலைக்கு உயர்த்தினார்.

